விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

GTV Express Parcel.lk
பொதிகள் சேவை
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
இங்கிலாந்து - Rs.1400/=
ஜெர்மனி - Rs.1900/=
பிரான்ஸ் - Rs.2000/=
அவுஸ்திரேலியா - Rs.1700/=
சுவிஸ் - Rs.2550/=
இத்தாலி - Rs.2250/=
இல.25, கந்தசாமி கோவில் சாலை, வவுனியா
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
GTV Enterprises (Pvt) Ltd (1335) 011 4 654 444


E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 246 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 06 வெள்ளிக்கிழமை (22.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ
## தேரேறி அருள்பாலித்த அலங்கார நல்லூரான்



15ஆம் பக்கம் பார்க்க

### செம்மணிப் புதைகுழி விவகாரம்
## நீதி விசாரணை தேவை
### பாராளுமன்றில் ரவிகரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்திற்குப் பன்னாட்டு நீதி விசாரணை தேவை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பில்

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழி
## அகழ்வு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)



**செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இன்று 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.**

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வானது கட்டம் கட்டமாக யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இதுவரை செம்மணி மனிதப் புதைகுழியில் 147 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் இனங் காணப்பட்டுள்ளன.

அத்தோடு புத்தகப்பை, குழந்தைகளின் பொம்மை, செருப்பு, தாயம்

04ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்க வேண்டும்
### த.வெ.க தலைவர் நடிகர் விஜய் தெரிவிப்பு



(மதுரை)

கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்க வேண்டும்

15ஆம் பக்கம் பார்க்க

### நல்லூர் ஆலயம் அருகில்
## வன்முறைக் கும்பல் வீட்டுக்குத் தீ வைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயத்திற்கு அருகில் உள்ள வீடொன்றினுள் அதிகாலைவேளை புகுந்த வன்முறைக் கும்பல்ஒன்றுவீட்டில்இருந்த தளபாடங்களுக்குத் தீ வைத்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சியில் கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் நேற்று மதியம் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மாமுனைக் கடற்கரை

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மயிலிட்டி துறைமுகத்தை நவீனத்துடன் விஸ்தரிக்க நடவடிக்கை
### கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர்



(கொழும்பு)

யாழ்ப்பாணம் மயிலிட்டி துறைமுகத்தை நவீன துறைமுகமாக மாற்றியமைப்பதற்குரிய நடவடிக்கை வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கொழும்பில் கடற்தொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள்

15ஆம் பக்கம் பார்க்க

### புளியம்பொக்கணையில்
## கசிப்புடன் இருவர் கைது

(கிளிநொச்சி)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணையில் கசிப்புடன் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்கள் மீது தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலைகள் நிகழ்த்தப்படுகின்றன
### ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு மேலும் ஒரு கடிதம்




(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர்கள் மீது தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை நிகழ்த்தப்படுகின்றன என பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள்

04ஆம் பக்கம் பார்க்க

### எதிர்வரும் முதலாம் திகதி முதல்
## கடவுச்சீட்டு வழங்கும் பணி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு வழங்கும் பணி ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கச்சேரி நல்லூர் வீதியின் பின்பக்கமாக கடவுச் சீட்டுப்பணிக்கென பிரத்தியேகமான கட்டிடம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் விழியால் இதய அஞ்சலி

பொன்னாவெளி பூநகரியைப் பிறப்பிடமாகவும்
ஆனந்தபுரம் மேற்கு கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட



## அமரர் பொன்னம்பலம் நித்தியானந்தம் அவர்கள்

(முன்னாள் தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்)

**தோற்றம் : 04.10.1948** **மறைவு: 20.08.2025**

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் ஸ்தாபக உறுப்பினராக மிக நீண்டகாலம் தன் சேவையினை ஆற்றியிருந்தபோதிலும் பெருந்தலைவர் அமரர்.**தி.இராசநாயகம்** அவர்களின் மறைவின் பின்னர் மூன்று ஆண்டுகளாக சிறுவர் இல்லத்தின் தலைவராக பொறுப்பேற்று ஆதரவற்றவர்களுக்கு ஆதரவுகாட்டி சேவையாற்றியவர் அமரர்.**பொன்னம்பலம் நித்தியானந்தம்** அவர்கள். அன்னார் எமது சிறுவர் இல்லத்தினது வளர்ச்சிக்காகவும் குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும் மிகவும் நெருக்கடியான காலத்தில் அர்ப்பணிப்போடு தன்னலமற்ற சேவையாற்றி இன்று எம்மையெல்லாம் மனங்கலங்கவைத்து மீளாத்துயில் கொண்டுள்ளார். அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல உருத்திரபுரீசுவரரது திருவடியில் சங்கமமாகி நித்திய வாழ்வு பெற பிரார்த்தித்து அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம்சாந்தி!!! ஓம்சாந்தி!!! ஓம்சாந்தி!!!**

**தலைவர்,**
**பணிப்பாளர்கள், பணியாளர்கள்**
**இல்லக்குழந்தைகள்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**

(C-3716)

# அந்தியேட்டி கிரியையும் நன்றி நவிலலும்

கடந்த 26.02.2025 அன்று இவ்வுலக வாழ்வை நீத்து அமரத்துவமடைந்த
ஸ்ரீ வேம்பொடுகேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
யா/எழுதுமட்டுவாள் ஸ்ரீகணேசா வித்தியாலய ஆசிரியருமான

## அமரர் திருமதி சரஸ்வதி தவராசசிங்கம்



**மண்ணில் 28.12.1969** **விண்ணில் 26.02.2025**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.08.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 06.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் சகோதரன் சொர்க்கலிங்கம் அவர்களின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**கல்விப் புலத்தில் கால் பதித்த சரஸ்வதியே**
**கண்டிப்பாய் கணித,விஞ்ஞானம் புகட்டி பெயர் பெற்றீர்**
**மாணவர் மனங்களில் நிலையுற்றீர்**
**நவனிவெளியூர் அம்மனின் அருள் பெற்றீர்**
**மனத் துணிவோடு எவ்விடமும் உலாவந்தீர்**
**நியாயங்கள் நிலை நாட்ட குரல் கொடுத்தீர்**
**வம்சம் நிலைத்திட மனம் கொண்டீர்**
**வழித் துணையாய் வர வேண்டியவன் மறுப்பினால்**
**வாழ்வை முடித்தீரே வருந்தி அழுகின்றோம்**
**உங்கள் நினைவென்றும் எம்மோடு நிலைத்திருக்கும்**
**சென்று வாருங்கள்**
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

அன்னாரின் இறுதிக்கிரியைகளுக்கு வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி, முகப்புத்தகம் வாயிலாக துயர் பகிர்ந்தவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியீடு செய்தவர்களுக்கும் அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.**

**077 956 7419**
**இத்தாவில், பளை.**


**சகோதரன்**
**குடும்பத்தினர்**



(C-3712)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரோகரா ஒலி விண்ணதிர
# நல்லைக்கந்தன் தேரேறி வலம் வந்தான்





வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்றையதினம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது.

(படங்கள்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள்...

எனப் பலரது கையொப்பத்துடன் ஐ.நா மனித உரிமையாளருக்குக் கடிதம் ஒ்னறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

அக்கடிதத்தில், பன்னாட்டு விசாரணையும் நடவடிக்கை பற்றி மிகத் தெளிவாக விடயங்களை வெளிப்படுத்தும் முகமாக எங்களால் எழுதப்படும் இந்தக் கடிதத்தை நீங்கள் இதற்கு முன் இதே விடயம் தொடர்பாக எழுதப் பட்ட கடிதங்களுடன் இணை த்தோ அல்லது தனித்தோ வாசிக்க முடியும் என்பதை தங்களின் கவனத் திற்குத் தருகிறோம்.

1.பன்னாட்டு விசாரணையை நிகழ்த்துவதற்காக 1948 ஆம் ஆண்டு இனப்படுகொலை வரைபின்கீழ் குற்றமாக அடையாளப்படுத்தப்பட்டவை நிகழ்த்தப்பட்டுள்ளதா? என்பதையும் அக் குற்றங்களின் நோக்கத்தையும் மதிப்பீடு செய்யும் அதிகாரத்துடன் கூடிய, பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) நிறுவ வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். எந்தவொரு விசாரணைக்கும் அளிக்கப்படும் அதிகாரம் 1948 இனப்படுகொலை வரைபின்படி முழுக்கால வரையறையையும் உள்ளடக்க வேண்டும்.

இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள தமது தாயகத்தில் ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் சுயாதீன நீதிப்பொறிமுறையின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும் என உலகப் புகழ்பெற்ற பன்னாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில் இலங்கை அரசின் செயற்பாடுகள் முழுஅளவிலோ அல்லது பகுதியளவிலேனும் ஈழத்தமிழரை அழிப்பதற்கான நோக்கத்தைக் கொண்டிருப்பதுடன் அவ்வழிப்புத் தொடர்பான எந்தவொரு விசாரணையும் நடைபெறாதவாறு நுட்பமாகத் தடை செய்துவருவதும் இனப்படுகொலை வரைபின் அகவிதி 2 இன் படி இனப்படுகொலை ஆகும்.

1956 ஜூன் மாதம் இலங்கை அரச ஆதரவுடன் சிங்களக் காடையர்களால் ஈழத்தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கல்லோயாப் படுகொலைகள் என அறியப்படும் முதலாவது பாரிய இனவழிப்பு நடைபெற்ற நாளிலிருந்து, தம்மீது நடைபெற்ற பன்னாட்டுக் குற்றங்களை விசாரிக்கும் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) அமைக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளிடம் தொடர்ந்து ஈழத்தமிழர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இப்பொறிமுறையின் ஊடாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் நீண்ட நாளாகத் தொடரும் வேதனையினைத் தீர்க்கவும் காணாமலாக்கப்பட்டவர்களின் விதியை அறிந்துகொள்ளவும் முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

## செம்மணி...

நாணயம் உட்பட பல சான்றுப் பொருட்களும் மீட்கப்பட்டு, அது மக்களின் பார்வைக்கும் நீதிமன்றத்தினால் வைக்கப்பட்டிருந்தது.

மேலும் செம்மணிப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஸ்கான் நடவடிக்கையில் மேலும் பல மனித எச்சங்கள் காணப்படலாம் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இன்று மீண்டும் ஆரம்பமாகவுள்ளது. (ம-7)


# INVITATION FOR BIDS (IFB)
## DISTRICT SECRETARIAT, KILINOCHCHI

1. The Department Procurement Committee (DPC) on behalf of District Secretariat, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in Grade mention below in Highways specialty.
4. “Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri lanka interms of the public Contract Act No 03. of 1987. The certificate of registration (PCA 03) shall be submitted with the bid”
5. Interested eligible bidders may obtain further information from Director Planning, District Secretariat, Kilinochchi (Email:- dpskilinochchi@gmail.com) from 25.08.2025 until 08.09.2025 from 9.00 am to 3.00 pm inspect the bidding documents at the address District Secretary, District Secretariat, Kilinochchi.
6. Qualification requirements to qualify for contract award is given in “section 4 of the qualification information and Section 5 of the Scheduleof the procurement document.
7. A complete set of procurement documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the District Secretary, Kilinochchi, Telephone 021 228 5760 from 25.08.2025 until 08.09.2025 from 9.00 am to 3.00 pm. upon payment of a non-refundable fee Rs. 4,000 . The method of payment will be by cash.
8. Bids shall be delivered in duplicate to the address at Chairman, Department Procurement Committee (DPC), District Secretariat Kilinochchi, on or before 10.00 am on 9th September 2025 late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders’ representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a Bid-Security, of an amount and validity date mentioned in the table below.
10. The pre-bid meeting will be held on 10.00 am on 4th September 2025 at the District Secretariat Kilinochchi.

Table

| S.No | Bid No. | Name of the Work | Estimated Cost without VAT (Rs.Mn) | CIDA Grade Required Highways. | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| 01 | KL/DPS/DO16/ RRP/06-1 | Improvement of Inthirapuram main road | 8.0 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 02 | KL/DPS/DO16/ RRP/06-2 | Improvement of Vempodukeny Puliyady road | 7.7 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 03 | KL/DPS/DO16/ RRP/06-3 | Improvement of Ithavil Ampalavalai Road | 8.0 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 04 | KL/DPS/DO16/ RRP/06-4 | Improvement of Mugamaali Kilaali Road | 7.9 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 05 | KL/DPS/DO16/ RRP/06-5 | Improvement of Eluthumadduvaal Ampalavalai road | 8.2 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 06 | KL/DPS/DO16/ RRP/06-6 | Improvement of Kariyalaingapaduva n Road | 8.0 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 07 | KL/DPS/DO16/ RRP/06-7 | Improvement of Kumulamunai Road | 8.2 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |
| 08 | KL/DPS/DO16/ RRP/06-8 | Improvement of Kiranchi Thannerthoddy Road | 7.8 | C8 and above | 100,000.00 | 23.12.2025 | 60 days |

**Chairman,**
**Departmental Procurement Committee,**
**District Secretariat,**
**Kilinochchi.**

(C-3714)


# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 15, விக்ரோறியா வீதியில் அமைந்துள்ள 5/2 எனும் ஆதனம் எமது ஆதனப் பதிவேட்டில் சொந்தக் காரர் எனப் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் உடுவிலைச் சேர்ந்த நாகலிங்கம் கணேசலிங்கம் பெண் சுகிர்தாலட்சுமி என்பவர் யாழ் நொத்தாரிசு மு.இ.காராளசிங்கம் முகதாவில் 1980.11.20 திகதி 5085ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் எம்.சதாசிவம் தியாகராஜா பெண் லோகேஸ்வரிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்திற்கு யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு தியாகராஜா ஜெயக்குமார் என்பவர் யாழ்.நொத்தாரிசு S.N.விஸ்வலிங்கம் முகதாவில் 2011.07.29ம் திகதி 4230ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனது மாதாவழி முதுசமும் ஆட்சியும் என வெளிப் படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு தியாகராஜா ஜெயக்குமார் என்பவர் கொழும்பு நொத்தாரிசு நளினி கணேஷயோகன் முகதாவில் 2023.06.16ம் திகதி 5666ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் குணசிங்கம் குணதாசன் என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகர சபை யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு கிராம அலுவலர் பிரிவு J/82 வண்ணார்பண்ணை **“தமிழ்பறங்கித்தறை”** நெற்பரப்பு நான்கு குளி பதினொன்றரை (நெற்பர 04குளி 11 1/2 ) இதில் வடகிழக்குப்பக்கமாக நெற்பரப்பு ஒன்றரையும் (நெபர 1 1/2) கிணறும் மலசலகூடமும் வான்பயிர் செய்பயிர்களும். இது 1986ம் ஆண்டு ஆனி மாதம் 14ம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தர் எம்.என் நவரத்தினம் அவர்களால் அளந்து வரையப்பட்ட 03ம் இலக்கப் படத்தில் 1ம் இலக்கத்தினூடாகச் சுட்டப்பட்டுள்ளது. இந்தப்பரப்பு ஒன்றரைக்கும் (நெபர 1 1/2) குறித்த 93ம் இலக்கப் படத்தின்படி எல்லைகள்,

கிழக்கு : சரவணமுத்து வீரசிங்கத்தின் ஆதனம்
வடக்கு : கணபதிப்பிள்ளை நடராஜாவின் ஆதனம்
மேற்கு : சின்னையா சதாசிவத்தின் ஆதனமும் பாதையும்
தெற்கு : குறித்த பாதை முகப்பும் திருமதி மகேஸ்வரி ஆனந்தரத்தினத்தின் ஆதனமும் திருமதி யோகேஸ்வரி இரஞ்ஞரத்தினத்தின் ஆதனம்

இதடங்கலும் இன்னும் குறித்த பாதையால் (10 அடி அகலம்) போக்குவரவு செய்யும் உரித்தும் ஆனால் குறித்த கிணற்றில் மேற்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காலுரித்தும் புறநீங்களாக.

தற்போது இவ்வாதனத்தை குணசிங்கம் குணதாசன் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குணசிங்கம் குணதாசன் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C-3715)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு சுடர்கள்

இயற்கையின் இரு பெரும் தோற்றங்கள் இன்று நாம் காணும் இரு சுடர்களான கதிரவனும் நிலவுமாகும். இவை இரண்டும் வையகத்தின் இருளை அகற்றும் பணியைச் செய்பவை. ஆனால் இரண்டும் இயல்பில் வேறுபட்டும் விளங்குகின்றன. கதிரவனின் ஒளி வெம்மையானது. நிலவின் ஒளி குளிர்மையானது. கதிரவன் காலையில் தோன்றும். நிலவு மாலையில் தோன்றும். ஆனால் இந்த இரு சுடர்களும் வையகத்திற்கே பொதுமையான சுடர்களாகும்.

காலையில் கிழக்கு திக்கிலே தோன்றும் கதிரவன் மாலையிலே மேற்குத் திக்கிலே மறைகிறது. இத்தோற்றமும் மறைவும் பகற்பொழுதை வரையறை செய்துகாட்டின. பகலில் மட்டும் தோன்றும் சுடராக இருப்பதால் பகலவன் எனப் பெயரிட்டனர். வட்டமான தோற்ற முடையதால் பரிதி என்றனர். வெம்மையாக இருப்பதால் வெய்யோன் என அழைத்தனர் சிவந்த கதிர்களோடு தோன்றுவதால் செங்கதிரோன் எனச் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது.

ஆதிமுதல் தோன்றுவதால் ஆதவன் என்றும் அழைக்கப்பட்டான். இப்பெயர்களைத் தமிழிலக்கியங்கள் பதிவு செய்து வைத்துள்ளன. மாலையிலே தோன்றும் நிலவு காலையில் மறைந்து விடுவதால் இரவுப் பொழுதை வரையறை செய்யத் துணை நின்றது. இன்னும் விண்மீன்கள் சூழ வலம் வருவதால் புதியதொரு அழகு பெற்று விளங்கியது.

நிலவுக்குத் தோற்றத்திலே ஒரு வளர்ச்சியும் தேய் மானமும் தெரிவது ஒரு தனித்துவமாகும். வட்டமான வடிவம் தேய்வது கண்டு அதனூடாக ஒரு கால வரையறையையும் முன்னோர் செய்தனர். வளர்ச்சியும் தேய்மானமும் பதினைந்து நாள் இடைவெளியில் நடந்தன. அதனைக் கணக்கிட்டு ஒரு "திங்கள்" என்ற காலப்பகுதியை வரையறை செய்தனர்.

முப்பது நாள்களை உள்ளடக்கி ஒரு திங்களை முதலிலே வகுத்துப் பதிவு செய்தவர் ஆண்டாள் ஆகும் "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள்" என ஆண்டாள் செய்த திங்களின் தொடக்கம் பற்றிய வரையறை இயற்கைச் சுடரான நிலவைக் கொண்டே செய்யப்பட்டுள்ளது. காலையும் மாலையும் சேர்ந்த ஒருநாள் ஒரு தொடக்கத்தையும்முடிவையும்விளக்கியது.

அது போல முப்பது நாட்களின் கடப்பு ஒரு திங்களின் உள்ளடக்கமாகக் கொள்ளப்பட்டது. இரு சுடர்களின் பெயரான கதிரவனும் நிலவும் காலக் கணிப்பை மட்டும் அன்றி மனித வாழ்வியலின் வேறு நிலைகளிலும் தொடர்புபடுத்தப்பட்டன.

பயிர்ச் செய்கைக்குப் பகலவனின் வெம்மை வேண்டப்பட்டது. மாரி வளத்திற்கும் வெய்யோன் துணை நின்றான். அதனால் கதிரவனை இயற்கைத் தெய்வமாக வழிபடுகின்ற மரபும் தோன்றி இன்று வரையும் தொடர்கிறது. கதிரவன் வையகமெங்கும் வலம் வருவதால் எவ்லாவற்றையும் காண்பவன்.

அதனால் எங்கு எது நடந்தாலும் அறிபவன். எனவே கதிரவனைச் சாட்சியாக வைத்து நிகழ்வுகள் நடைபெறுகின்றன. சிலப்பதிகாரம் என்னும் பழந்தமிழ் இலக்கியம் இதற்குச் சான்றாக உள்ளது. கோவலன் கள்வனெனப் பழிச் சொல் பெற்றுக் கொலையுண்ட போது கண்ணகி காய்கதிர்ச் செல்வனிடமே நீதி கேட்கிறாள்.

நிலவு என்னும் சுடர் மனித உணர்வுகளில் ஏற்படும் மாற்றங்களை விளக்கப் பயன்படுகிறது. பெண்ணின் அழகிய முகத்திற்கு நிலவு உவமையாக இலக்கியங்களிலே எடுத்துக் கூறப்பட்டுள்ளது. தண்மையும் ஒளியும் பெண்ணின் முகத்திலும் இருப்பதால் "மதிமுகம்" எனப் பேசப்பட்டது.

நிலவுக்குச் "சந்திரன்" என்ற பெயரும் உண்டு. நிலவு தோன்றும் மூன்றாம் நாள் "மூன்றாம் பிறை" எனப் பெயர் பெற்றது. அதனை வழிபாடு செய்யும் மரபும் தொன்று தொட்டு நிலவுகிறது. முழுநிலவு, நிறை நிலவு என்ற சொற்பயன்பாடுகளும் உள.

இருசுடர்களும் சிலப்பதிகாரம் என்னும் தமிழ்ப் பேரிலக்கியத்திலே வாழ்த்தப் பெற்றுள்ளன. ஞாயிறு என்ற சொல்லால் கதிரவனை விளித்து "ஞாயிறு போற்றுதும்" எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நிலவைத் திங்கள் என விளித்து திங்களைப் போற்றுதும் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கல்வெட்டுகளிலே கொடை பற்றிய பதிவுகளிலே சந்திராதித்தியர் வரை யெனக் குறிப்புண்டு கதிரவனும் நிலவும் உலகில் நிலவும் வரை இக்கொடை தொடர வேண்டும் என்பதையே இக் குறிப்பு உணர்த்துகிறது. பாரதி தனது கண்ணம்மா பற்றிய பாடலிலே "சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ" என இருசுடர்களையும் பதிவு செய்துள்ளார்.

வெள்ளி நற்சிந்தனை 02



முனைவர் ச.மனோன்மணி


உ
"மகான்களின் வழி மெய்ப்பொருள் காண்"
வல்லை கடல் நீர் ஏரி வலம்




ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழாவினை முன்னிட்டு 23.08.2025 அன்று
வல்லை ஆஞ்சநேயர் ஆலயத்திலிருந்து
பால் காவடி, பன்னீர் காவடி, புஸ்பக் காவடி ஊர்வலம்
காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.
பங்கு கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்
077 390 1877, 077 378 3316
சைவப்பிரகாச பேரவை
(5088)


# நெல்லின் விலையில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய அரிசி விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா தெரிவித்துள்ளார். நெல்லுக்கான விலை 14 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் 2 இலட்சம் கிலோ மெட்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அவை தற்போது சதோச நிறுவனங்களில் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், உள்ளூர் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் 200 ரூபாவுக்கும் மேல் அரிசியை விற்பனை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக, ஐக்கிய அரிசி விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா தெரிவித்துள்ளார். (நி)

# டயானா கமகேவுக்கு பிடியாணை உத்தரவு



(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளை எதிர் கொண்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே விசாரணைக்கு முன்னிலையாகத் தவறியதை அடுத்து, அவரைக் கைது செய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியதால் இந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பிரதிவாதியான டயானா கமகேயின் பிணையாளர்களுக்கு அழைப்பாணை அனுப்பவும் உத்தரவிடப்பட்டது. (நி)


லங்கா மஹால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (146)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால்

# திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் 4 பதவியணிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக செயலாளர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.

மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்), மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்), மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (படவரைஞர்), வடக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை ஆகிய 4 பதவியணிகளுக்குமே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முழுமையான அறிவித்தல்கள் மற்றும் விண்ணப்பங்கள் என்பன www.np.gov.lk - Exam and Recruitment - Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் பார்வையிட முடியுமென்பதுடன் தகைமையுடையவர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (8)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் குழு இசையில் பாட்டு - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள், வயலின் - கேதீஸ்வரன் வேலதீபன், மிருதங்கம் - முரளிதரன் சுலக்சன், கெஞ்சிரா - செல்வன் புவனேஸ்வரன் வேணு காந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையரங்கில் பாட்டு- செல்வி பரமேஸ்வரி கணேசகம்பர், வயலின் - இராசரத்தினம் நிரோசன், மிருதங்கம் - அருமைநாதன் சண்முகப்பிரியன், முகர்சிங் - நித்தியானந்தன் மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (8)

## நல்லூர் உற்சவகால அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் "அருளுரை" இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணி முதல் 8.30 மணி வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "குருவாய் வருவாய்" எனும் தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (8)

# பேராசிரியர் வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா

## திருக்குறள் நூல் பெறும் பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரும் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை சிறப்புற நடத்தியவருமான பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு தமிழி அமைப்பு பேராசிரியர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா ஒன்றை நடத்தவுள்ளது.

இந் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கூவர் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

குறித்த நிகழ்வில், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு, முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய திருக்குறள் உரைநூல் வழங்கும் செயல் திட்டமும் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் திருக்குறள் உரைநூலினை கீழ் வரும் பாடசாலைகள் பெறவுள்ளன.

யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி, பெரியபுலம் மகா வித்தியாலயம், கோண்டாவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, இணுவில் இந்துக்கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி, வசாவிளான் ம.வி, இராமநாதன் கல்லூரி, முத்து தம்பி ம.வி, கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி, யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ் ம.வி, செங்குந்த இந்துக் கல்லூரி, சென்ற் ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, மல்லாகம் ம.வி, சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் ம.வி, தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை, நெல்லியடி ம.வி, அச்சுவேலி ம.வி, இடைக்காடு ம.வி, அத்தியார் இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி, இளவாலை கென்றியரசர் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, பன்னாகம் மெய்கண்டான் கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் ம.வி, இணுவில் மத்திய கல்லூரி, வல்வை மகளிர் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி, வேலணை ம.வி, புங்குடுதீவு ம.வி, நயினாதீவு ம.வி, மண்டைதீவு ம.வி, கோப்பாய் நாவலர் வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி, கொட்டடி நமசிவாய வித்தியாலயம், சங்கானை சைவப்பிரகாச வித்தியாசாலை, இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், நெல்லியடி புனித இருதயர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி, வரணி ம.வி, ஆவரங்கால் ம.வி, வட்டுக்கோட்டை சரஸ்வதி ம.வி, புற்றளை ம.வி, உடுப்பிட்டி மிஷன் கல்லூரி, அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கைதடி திருநாவுக்கரசு வித்தியாலயம், தொண்டைமானாறு வீரகத்தி ம.வி. (8)

## நல்லூரான் திருவடிக்கு... இன்று 25 ஆம் நாள் திருவிழா



### கா! நல்லைக் குமரேசனே!

நாளைநடப்பதை யாருமறி யாதபடி
நல்திரை கொண்டுமறைத்தாய்
வேளைவரும் வேளையே மெய்ஞ்ஞான வருளீந்து
மெய்ப்பொருளை யுணரவைப்பாய்
வேளனே யுந்தனது லீலைகள் யாவுமே
மேதினியில் புதிராகுமே
நாளெலா முன்தாளில் வீழ்ந்துயான் மூழ்குவேன்
நறுநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

### நல்லருள் தருவாய் கார்த்திகேயா

சூரனை சம்ஹாரம் செய்து வள்ளியை
சம்சாரம் ஆக்கி வீறுநடை போட்ட ஆறுமுகா
எமக்கு அனுதினமும் ஏறுமுகம் தாருமையா
நல்லையில் அமர்ந்த உன்னை
வல்லைவெளி தாண்டியும் வணங்குகின்றோம்
வடிவேலா நல்லதெல்லாம் தந்து காத்திடுவாய்
கந்தா கடம்பா கார்த்திகேயா

திருமதி.தம்பிராஸா தேவாபரணம்
வதிரி, கரவெட்டி

### வா முருகா வா

தீர்த்தமாடும் வேலவா! தேனருள் பொழியவா!
மாவினை பிளந்தவா! மாதவை கொண்டவா!
மாதவம் தெரிந்தவா! மாநிலம் காக்கவா!
வினையினை போக்கவா! வீண்சுமை தீர்க்கவா!
வித்தைகள் புரிந்தவா! விடுதலை பிறக்கவா!

விநாயகர் சாந்தை மு.ரமேஷ்

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் உள்ள 1443/4 கியூப் மணல், 3 கியூப் கிரவல் என்பவை நாளை காலை 9.30 மணிக்கு ஏலத்தில் விற்கப்படவுள்ளது. எனவே குறித்த ஏல விற்பனையில் கலந்து கொள்ள இருப்பவர்கள் நாளைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்பு விற்பனைப் பொருட்களைப் பார்வையிடலாம்.

பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்த கூடிய ஆவணத்துடன் சமூகமளிக்க வேண்டும்.

ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை நிதிபதிக்கு மட்டுமே உண்டு. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப பணத்தினை உடனடியாகச் செலுத்தி பொருட்களினைப் பெற்றுக் கொள்ள முடியும். காசோலை மூலமான கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மணலினையும் கிரவலினையும் புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து வழித்தட அனுமதிப் பத்திரத்தினைப் பெற்று எதிர்வரும் 30.08.2025 மற்றும் 06.09.2025 ஆம் திகதிகளில் நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவில் மேதை தெட்சணாமூர்த்தி அமையம் பொதுக்கூட்டம்

| | | |
|---|---|---|
| காலம் | :- | 06.09.2025 |
| நேரம் | :- | மாலை 3.00 மணி |
| விடயம் | :- | புதிய நிர்வாகத் தெரிவும் அமையம் தொடர்பான கலந்துரையாடலும் |
| இடம் | :- | தெட்சணாமூர்த்தி உதயசங்கர் இல்லம், அளவெட்டி வடக்கு |
| தகவல் | :- | தவில் மேதை தெட்சணாமூர்த்தி அமையம் |

(c-3709)

## கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் (வ.து)- கரவெட்டி

**பதிவு இலக்கம்:- J/1553** **பதிவு திகதி:- 16.02.1971**

## பிற்போடப்பட்டுள்ளது

எமது சங்கத்தின் புதிய கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 23.8.2025 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவிருந்த கிளைப் பொதுக் கூட்டங்களுக்கான அழைப்பிதழ் கடிதங்கள் கிடைக்கப்பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமத நிலையால் இக்கூட்டங்கள் அனைத்தும் 13.09.2025 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கின்றோம்.

**22.08.2025** **செயலாளர்**
**021 226 3263** **கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம்**

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- | மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- | திருமதி சதீஸ் தினஜா |
| விண்ணப்பதாரர் பெயர் | :- | திருமதி சதீஸ் தினஜா |
| முகவரி | :- | முருங்கையற்புலம், அளவெட்டி மேற்கு, அளவெட்டி |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 19, சாமந்தியக்கூடல் வீதியில் ஆதன இல.135 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை 'அறளையப்புலம்' என்ற ஆதனம் T.பொன்னுத்துரை என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்தநொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 18.05.2019 ஆம் திகதியில் 5616 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை 'அறளையப்புலம்' நிலப்பரப்பு இரண்டு குழி பதினாறு (நிலப். 2 குழி 16 ) விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்பதாரரான சதீஸ் பெண் தினஜா என்பவரை வந்தடைந் துள்ளது.

இவ் ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தாய் உறுதிகளில் ஒன்றான பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் 07.03.1999 ஆம் திகதியில் 1752 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய பிரகடன உறுதியானது ஆட்சியுரிமைச் சட்டத்தின் பிரகாரம் அளவெட்டி மேற்கு முருங்கையற்புலத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை குலசிங்கமும் பெண் நாகரத்தினமும் ஆகியோரால் இவ்வுறுதியினை முடித்துள்ளார்கள். எனவே குறித்த இவ் ஆதன வரிப் பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மூலம் கடந்த 30 வருட ஆதன உரித்து வரலாற்றினை நிச்சயப்படுத்த முடியாதுள்ளது.

1752 ஆம் இலக்க உறுதி பதிவு செய்யப்பட்ட H744/51 இலக்க காணிப்பதிவுப் புத்தக இருமடித்தாலும் இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**ஆதனவிபரங்கள் மற்றும் மேலதிக விபரங்கள் என்பன தொடர்பாக, வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் மல்லாகம் உபஅலுவலகத்தின் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம்.**

தற்போது இவ்வாதனத்தை சதீஸ் பெண் தினஜா என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தை உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் சதீஸ் பெண் தினஜா எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(5101)


*Lions International District 306 D12*

## சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 D12 நடாத்தும் கார்னிவல் மற்றும் இலவச மருத்துவ சேவைகள்

பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள திருவிழாக் காலத்துக்கான லயன்ஸ் காரியாலத்தில் கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கலும் இலவச இரத்த அழுத்த பரிசோதனையும் இலவச நீரிழிவு பரிசோதனையும் நடைபெற்று வருகின்றது.

**மேலும் எமது காரியாலயத்தில் புதிய லயன்ஸ் அங்கத்துவம் பற்றிய மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.**

அத்துடன் லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதி திரட்டுவதற்காக சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 D12 நடாத்தும் **கார்னிவல்** 20.08.2025 தொடக்கம் 24.08.2025 வரை மாலை 5 மணி தொடக்கம் இரவு 12 மணிவரை நல்லூர், சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.




லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதிப் பங்களிப்பு செய்ய விரும்புவோர் தொடர்புகளுக்கு : (Lions Eye Hospital Financial Contributors to Contact)

லயன். Dr K.M.பத்மநாதன் (லயன்ஸ் மாவட்ட ஆளுநர் 306 D12)
077 732 3702
district306d12@gmail.com

*We Serve With Humanity*

(5100)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

தோற்றம் 21 - 10 - 1965



மறைவு 26 - 07 - 2025

### அமரர். கணேசலட்சுமி உமாசுதன்

(கணா) இளைப்பாறிய ஆசிரியை

கடந்த 26.07.2025 சனிக்கிழமை அன்று கல்வளைப் பிள்ளையாரின் பாதங்களைச் சென்றடைந்த எங்கள் குடும்ப ஒளியின் அந்தியேட்டி நிகழ்வுகள் 22.08.2025 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் அந்தியேட்டி நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவிலும் நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறும் வேண்டுகின்றோம்.

**"நவமகால்" கல்வளை சண்டிலிப்பாய்.** (5106) **இங்ஙனம் குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 100 தொன் உணவுப் பொருட்களை காசாவுக்கு வழங்கிய இத்தாலி



காசாவில் நிலவி வரும் கடுமையான மனிதநேய நெருக்கடியை சமாளிக்கும் நோக்கில், இத்தாலி அரசு "Operation Trail of Solidarity 2" என்ற பணியின் கீழ் சுமார் 100 தொன் உணவுப் பொருட்களை விமானங்களின் மூலம் காசாவுக்கு வழங்கி வைத்துள்ளது.

ஒகஸ்ட் மாதம் 9ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை இடைவிடாமல் மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சியில், இத்தாலிய விமானப்படையின் C-130 வினியோக விமானங்கள் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த உணவுப் பொருட்கள் நேரடியாக பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் பாதுகாப்பாக கிடைக்கச் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இத்தாலி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "காசாவில் பொதுமக்கள் மிகப்பெரிய சிரமங்களை எதிர்கொள்ளும் நிலையில், சர்வதேச சமூகத்துடன் இணைந்து உதவி செய்வது இத்தாலியின் கடமையாகும்" எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த உதவி நடவடிக்கை, இந்தியா, ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகளின் பங்களிப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவுக்கு கடல் மற்றும் நிலப்பாதை வழியாக உணவுப் பொருட்கள் கொண்டு செல்ல முடியாத சூழல் காணப்பட்டதால் ஏர்டிராப் முறை மூலமே குறித்த உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சர்வதேச மனிதநேய அமைப்புகள், இத்தாலியின் இந்த நடவடிக்கையை வரவேற்றுள்ளதோடு காசா மக்களுக்கு உடனடி உதவி கிடைத்துள்ளதாகவும், மேலும் இத்தகைய முயற்சிகள் தொடர வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரஷ்யா - உக்ரைன் போ... இந்தியா மீது வ...

## வெள்ளை மாளி...

**(வோஷிங்டன்)** ▪▪▪▪▪▪▪▪▪▪▪▪ **உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரை முடிவுக்குக் கொண்டு வர ரஷ்யா மீது மறைமுக அழுத்தம் கொடுக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இந்தியாவின் மீது கடுமையான வரிகளை விதித்ததாக வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார்.**

யுத்த நிறுத்தம் எனும் மிகப்பெரிய அழுத்தத்தை ட்ரம்ப் அளித்துள்ளார். இதில் இந்தியா மீதான தடைகள் மற்றும் பிற நடவடிக்கைகளையும் அவர் எடுத்து உள்ளார். ரஷ்யா - உக்ரைன் போர் முடிவுக்கு வர வேண்டும் என்று ட்ரம்ப் மிகவும் தெளிவாக கூறியுள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து வழிகளையும் அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, ரஷ்யாவுடன் இராணுவ வர்த்தக உறவுகளை வைத்திருக்கும் நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க தீர்மானித்தோம்.

ரஷ்யாவிடம் இருந்து S-400 ஏவுகணை அமைப்பை வாங்குவதற்கான இந்தியாவின் முடிவு, இந்தப் போருக்கு மறைமுகமாக ஆதரவளிப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். இந்தியாவுக்கு எதிராக இந்த கூடுதல் வரி விதிப்பு, ரஷ்யாவுடனான அதன் இராணுவ வர்த்தகத்தை நிறுத்துமாறு வலியுறுத்துவதற்கே.

ரஷ்யாவும் உலகெங்கிலும் உள்ள அனைத்து நாடுகளும் அமெரிக்காவை மீண்டும் மதிக்கின்றன. இது ரஷ்யா-உக்ரைனுடன் முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது மட்டுமல்லாமல், உலகெங்கிலும் உள்ள 7 மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்தது.

இந்தியா - பாகிஸ்தான்


## திருப்பதிக்கு 121 கிலோ தங்கத்தை நன்கொடையாக வழங்கிய தொழிலதிபர்

(டில்லி)

திருப்பதி கோவிலுக்கு 121 கிலோ தங்கத்தை பக்தர் ஒருவர் நன்கொடையாக அளிக்க முன்வந்து இருப்பதாக சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

இது தொடர்பாக சந்திரபாபு நாயுடு கூறியிருப்பதாவது "தொழிலதிபர் ஒருவர் திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு 121 கிலோ தங்கத்தை நன்கொடையாக அளிக்க முன்வந்துள்ளார். இதன் மதிப்பு இந்திய மதிப்பில் 140 கோடியாகும். புதிதாக தொடங்கிய நிறுவனம் வெற்றிகரமாக இயங்குவதால் தங்கத்தை நன்கொடையாக அளிக்க முன்வந்து இருக்கிறார்.

எனினும், அந்த தொழிலதிபர் யார் என்ற விவரத்தை வெளியிட சந்திரபாபு நாயுடு மறுத்துவிட்டார். (நி)



## பதற்றங்களை தணிக்க சீனா - இந்தியா சந்திப்பு

(டில்லி)

சீனாவுடனான உறவுகளில் பதற்றங்களைத் தணிக்க இந்தியா தொடர்ந்து முயற்சித்து வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி கடந்த செவ்வாய்க்கிழமை சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யியை டில்லியில் அமைந்துள்ள அவரது உத்தி யோகப்பூர்வ இல்லமான 7 லோக் கல்யாண் மார்க்கில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தியா மீது 50 சதவீதம் வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் எடுத்த நடவடிக்கையின் பின்னணியில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்திய-சீன எல்லையில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையின் அவசியத்தை பிரதமர் நரேந்திர மோடி இந்த சந்திப்பின் போது வலியுறுத்தினார்.


மேலும், நியாயமான மற்றும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ாரை நிறுத்தவே வரி விதிப்பு

## கை தகவல்



மோதலை தடுத்து நிறுத் தினோம். இந்த இரு நாடுகளின் மோதலை முடிவுக்குக் கொண்டுவர ட்ரம்ப் வர்த்தகத்தை மிகவும் சக்திவாய்ந்த முறையில் பயன்படுத்தியுள்ளார் என வெள்ளை மாளிகையின் செய்திதொடர்பாளர் கரோலின் லீவிட் மேலும் தெரி வித்துள்ளார்.


முன்னதாக, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு 25 வீத பரஸ்பர வரி விதிக்கப்பட்ட நிலையில், எச்சரிக்கையை மீறி ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்வதாக குற்றச்சாட்டை முன்வைத்து வரியை 50 சதவிகிதமாக ட்ரம்ப் உயர்த்தினார்.

இதனிடையே, ரஷ்யா மற்றும் உக்ரைன் ஜனாதிபதிகளை அடுத்தடுத்து ட்ரம்ப் சந்தித்து அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இரு தலைவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் எந்த ஒப்பந்தமும் இறுதி செய்யப்படவில்லை என்றாலும் முன்னேற்றம் ஏற்பட்டதாக தெரிவித்த ட்ரம்ப், போர் நிறுத்தத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார். (நி)

# நாடு கடத்தப்பட்ட ஆப்கானியர்களுடன் பயணித்த பேருந்து விபத்திற்குள்ளானது!

## 71 பேர் உயிரிழப்பு



(காபூல்)

மேற்கு ஆப்கானிஸ்தானில் ஈரானில் இருந்து நாடு திரும்பிய புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற பயணிகள் பேருந்து ஒன்று லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளாகி தீப்பிடித்து எரிந்தது.

ஹெராத் மாகாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் குறைந்தது 71 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களில் 17 சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் அடங்குவர் என்று மாகாண அரசாங்க செய்தித் தொடர்பாளர் அகமதுல்லா முத்தகி உறுதிப்படுத்தியுள்ளார்.

குசாரா மாவட்டத்தில் உள்ள ஹெராத் நகருக்கு வெளியே உள்ள வீதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

பேருந்தின் அதிக வேகம் மற்றும் சாரதியின் அலட்சியமே விபத்துக்கான காரணம் என ஹெராத் மாகாண பொலிஸார் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான பேருந்து ஈரானில் இருந்து திரும்பி தலைநகர் காபூல் நோக்கி ஆப்கானியர்களுடன் சென்று கொண்டிருந்ததாக மாகாண ஆளுநர் செய்தித் தொடர்பாளர் முகமது யூசுப் சயீதி AFP செய்திச் சேவையிடம் கூறியுள்ளார்.

மில்லியன் கணக்கான புலம்பெயர்ந்தோரை வெளியேற கட்டாயப்படுத்தும் பிரசாரத்தை டெஹ்ரான் தொடங்கியுள்ளது.

கடந்த மாதங்களில் ஈரானில் இருந்து ஒரு பெரிய அளவிலான ஆப்கானியர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

பல தசாப்த கால போர் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளில் இருந்து தப்பி ஓடிய மில்லியன் கணக்கான ஆப்கானியர்களுக்கு நீண்ட கால புகலிடமாகவுள்ள ஈரான் மற்றும் பாகிஸ்தானிலிருந்து இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து 1.6 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பியுள்ளனர் என்று ஐக்கிய நாடுகளின் இடம்பெயர்வு நிறுவனம் சுட்டிக்காட்டுகிறது. (நி)

எல்லைத் தீர்வுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யியைச் சந்தித்த பின்னர் பிரதமர் மோடி எக்ஸில், வெளிவிவகார அமைச்சர் வாங் யியைச் சந்தித்ததில் மகிழ்ச்சி.

கடந்த ஆண்டு கசானில் ஜனாதிபதி உடனான எனது சந்திப்பிலிருந்து, இந்தியா – சீனா உறவுகள் ஒருவருக்கொருவர் நலன்கள் மற்றும் உணர்திறன்களை மதிப்பதன் மூலம் நிலையான முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டின் போது தியான்ஜினில் நடைபெறும் எங்கள் அடுத்த சந்திப்புக்காக நான் காத்திருக்கிறேன்.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான நிலையான, ஆக்கபூர்வமான உறவுகள் பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதி மற்றும் செழிப்புக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என பதிவிட்டுள்ளார். (நி)



# கராச்சியும் வெள்ளத்தில் மூழ்கியது

## 10 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தலைநகரம் மற்றும் அதிக மக்கள் தொகை கொண்ட நகரமான கராச்சி, இந்த நாட்களில் நாட்டைத் தாக்கும் பலத்த பருவமழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, பாகிஸ்தான் அரசாங்கம் அங்குள்ள பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களை மூட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மழை காரணமாக சுமார் 10 பேர் இறந்துள்ளனர். மேலும் இப்பகுதியில் அதிக கனமழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு பருவ மழை பாகிஸ்தான் முழுவதும் கடுமையான பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வடமேற்கு மலைகளைத் தாக்கிய திடீர் வெள்ளத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 385 ஆக உயர்ந்துள்ளது. மேலும் குறிப்பிடப்படாத எண்ணிக்கையினரைக் காணவில்லை என்று அந்நாட்டின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் பணிப்புறக்கணிப்பு

# அஞ்சல் ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை




(கொழும்பு)

பணிப்புறக்கணிப்பை தொடர்ந்து கடமைகளுக்கு வராமல் இருக்கும் அஞ்சல் ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளதாக அஞ்சல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக் கைகள் குறித்து சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

19 கோரிக்கைகளை முன் வைத்து கடந்த 17 ஆம் திகதி முதல் அஞ்சல் ஊழியர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, கட்டுநாயக்க விமான நிலைய களஞ்சிய சாலையில் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள் மற்றும் பொதிகள் தேங்கியுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் அசௌ கரியங்களுக்கு உள்ளாகி யுள்ளதாகத் தெரிவித்துள்ள னர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1995- இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>2இல்செவ்<br>கி-பா-26<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc,Senior Software Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15970 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி-பா- 16 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/15998 |
| பிறப்பு:1985-இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்-O/L.கமம்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15971 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்-சதயம்<br>7இல்செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSC, MSC, Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16000 |
| பிறப்பு:1982-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>7இல்செவ்<br>கி-பா-32<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:BBM,Business (Australia)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/15973 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்-ரோகினி<br>கி-பா-17<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15664 |
| பிறப்பு: 1992- இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>கி-பா-17 1/2<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்-MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ: B/15974 | பிறப்பு-1989-RC<br>நட்சத்திரம்-மிருகசீரிடம்<br>கி-பா-65<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, Cleark<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15679 |
| பிறப்பு: 1997- இந்து<br>நட்சத்திரம்-திருவோணம்<br>8இல்செவ்<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில்: BA, Officer (Singapore)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு(PRஉள்ளவர்)<br>தொ.இ: B/15976 | பிறப்பு-1993-RC<br>நட்சத்திரம்-உத்தரம்<br>உயரம்-5'3"<br>தகைமை/தொழில்: BFA, DO<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15669 |

இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 430

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# மூன்று நண்பர்கள்!

ஒரு ஊரிலே ஒரு ஆண் இருந்தான். அவன் பெயரிலே ஏதோ ஒரு குற்றச்சாட்டு அதனாலே அரண்மனையிலிருந்து அழைப்பு வந்தது.

"உன்னை விசாரிக்க வேண்டியிருக்கிறது." அதனாலே அரண்மனை விசாரணை மண்டபத்திற்கு வந்து சேர் என்று அரண்மனை ஆணை!

"நம் பெயரிலே எந்தத் தவறும் இல்லை. நாம் எந்தத் தவறும் செய்யவில்லையே!" என்று நினைத்தான் இருந்தாலும் அரசாங்க உத்தரவு. அதை அலட்சியம் செய்ய முடியுமா? போய்த்தான் தீர வேண்டும்.

தனியாகப் போவதற்கு அவனுக்குத் தயக்கமாக இருந்தது.

தன்கூட யாராவது வந்து தனக்காகக் கொஞ்சம் வாதாடினால் நன்றாக இருக்கும் என நினைத்தான்.

வக்கீல் மாதிரி ஒருவர் தேவைப்பட்டார். யாரை அழைத்துக்கொண்டு போகலாம்? என்று யோசனை செய்தான்.

அவனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தார்கள். அதனாலே அவர்களிலே ஒருவரை அழைத்துக்கொண்டு போகலாம் என்று முடிவு செய்து கொண்டு மிகவும் நெருக்கமான ஒரு நண்பன் வீட்டுக்குப் போனான்.

"என்னை விசாரிப்பதற்காக அரண்மனைக்கு வரச்சொல்லி ஆணை வந்திருக்கிறது. நீ கொஞ்சம் எனக்காக அங்கே வந்து வாதாட வேண்டும்!" என்று கேட்டுக்கொண்டான்.

"என்னாலே வரமுடியாது!" என்று சொல்லிவிட்டான். அவன் "ரொம்பவும் நெருக்கமாக நம்மிடம் பழகிக் கொண்டிருந்த இவனே இப்படி சொல்லிவிட்டானே." என்று நினைத்து கொஞ்சம் வருத்தப்பட்டான்.

சரி பரவாயில்லை இன்னொரு நண்பனிடம் போவோம் என்று அவனிடம் போனான் விபரத்தைச் சொன்னான்.

அவன் என்ன சொன்னான் தெரியுமா?

"வரமுடியாது" என்று சொல்லவில்லை. "வருகிறேன் ஆனால் அரண்மனை வாசல் வரைக்கும் தான் வருவேன். அங்கேயே நின்று கொள்வேன். அதற்கு மேலே வரமாட்டேன்" என்று விட்டான்.

"அப்படி அதுவரைக்கும் வந்து என்ன பிரயோஜனம்? கடைசி வரைக்கும் நம்கூட வந்து நமக்காக வாதாட வேண்டுமே அதுதானே முக்கியம்!" என்று நினைத்தான்.

சரி என்று சொல்லி மூன்றாவது நண்பனிடம் போனான். அதிக நெருக்கம் இல்லை இருந்தாலும் போனான். விபரத்தை சொன்னான்.

அவன் என்ன சொன்னான் தெரியுமா?

ஒன்றுமே சொல்லவில்லை. உடனே புறப்பட்டு விட்டான். "வா போகலாம்!" என்று கூடவே வந்தான். கடைசி வரைக்கும் வந்தான் ராஜா முன்னாடி நின்றான். இவனுக்காக அவன் வாதாடினான். பரிந்து பேசினான். விடுதலை வாங்கிக் கொடுத்தான்.

இது ஒரு யூதக் கதை நண்பர் ஒருவர் என்னிடம் சொன்னார். இதிலே உள்ள உள் கருத்து என்னவென்றால் ஒவ்வொரு மனித னுக்கும் மூன்று நண்பர்கள் உண்டு. முதல் நண்பனுக்கு என்ன பெயர் தெரியுமா? பணம்! இரண்டாவது நண்பன் யார் தெரியுமா? - சொந்தம்! மூன்றாவது நண்பன் - அவன் செய்த நற்செயல்கள்! கடைசியிலே - பணம்கூட வராது. சொந்தம் - கல்லறை வரைக்கும் வரும். நற்செயல்கள்தான் கூடவே வரும்

அதாவது நமக்குப் பின்னாலும் நம்மைச் சொல்லிக்கொண்டே இருக்கும்!

மனிதன் என்பவன் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். கருத்தை வலியுறுத்துவதற்காக சொல்லப்பட்ட கதை. நம் ஆள் ஒருவர் ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டான். ஒரு சைக்கிளைத் திருடிவிட்டதாக அவன் பெயரிலே வழக்கு ஒரு நண்பனைத் தேடிப் போனான்.

"எனக்கு சாதகமாக சாட்சி சொல்ல வரவேண்டும் என்று கூப்பிட்டான். அவன் மறுத்துவிட்டான்.

"இதோ பாரப்பா... உனக்கு சாதகமாக சாட்சி சொல்லமுடியாத நிலையிலே நான் இருக்கிறேன்.

**அதற்கு மூன்று காரணங்கள்...**

முதல் காரணம்: இதுவரைக்கும் சாட்சி சொல்லி எனக்குப் பழக்கம் இல்லை!

இரண்டாவது காரணம்: பொய் சாட்சி சொல்வது தப்பு என்று பெரியவங்கள் எல்லாம் சொல்லி இருக்கிறார்கள்!

மூன்றாவது காரணம்: நீ திருடிக்கொண்டு போன சைக்கிள். அந்த சைக்கிளே என்னுடையதுதான் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் பதிவாகும் மரணங்களுக்கு தொற்றா நோய்களே காரணம்

## இலங்கை மருத்துவ சங்கம்

(கொழும்பு)

**நாட்டில் பதிவாகும் மரணங்களில் 80 சதவீதமானவை தொற்றா நோய்களாலேயே இடம்பெறுபவையாகும் என இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.**

அத்தோடு நாட்டில் மூத்த பிரஜைகள் வருடத்துக்கு 25 - 30 கிலோ சீனி அடங்கிய உணவுகளை உட்கொள்வதாகவும் மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் கொண்டவர்களின் முதல் ஆரம்பத்தை அவதானிக்கும் போது அவர்கள் எடை குறைந்தவர்களாக உள்ளனர். பெரும்பாலானவர்கள் வசதி குறைந்தவர்களாக உள்ளனர். இலங்கை மத்திய பொருளாதாரம் கொண்ட நாடாகும். இந்த நாட்டில் தான் இவ்வாறான நிலைமை காணப்படுகிறது. வறுமை நிலையில் உள்ள நாட்டு மக்கள் எவ்வாறான உணவுகளை உட்கொள்கின்றனர் அவர்கள் அதிகளவு சீனி மற்றும் உப்பு கொண்ட உணவுகளையே உட்கொள்கின்றனர்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் குறிப்பாக மேல் மாகாணத்தில் ஐவரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் காணப்படுகிறது. நாட்டில் பதிவாகும் மரணங்களில் 80 சதவீதமானவற்றுக்கு தொற்றா நோய்கள் மற்றும் அதனையொட்டிய நோய்களே பிரதான காரணியாக உள்ளன.

இதய நோய், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, பக்கவாதம் உள்ளிட்ட தொற்றா நோய்களுக்கு பிரதான மூலக் காரணி சீனியாகும். குறிப்பாக மதுபாவனை பழக்க முடையவர்களே இதில் பெரும்பாலானவர்களாக உள்ளனர்.


எவ்வாறு இருப்பினும் தற்போது சிறிதளவும் மதுப்பழக்கம் அற்றவர்களிலும் அவ்வாறான நோய் நிலைமைகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதிகளவு சீனி எடுத்துக் கொள்வது இதயத்தில் கொழுப்பு படிவதற்கு காரணமாக அமைகிறது என மருத்துவ சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## பரிசில் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தச்சன்தோப்பு கோவிலாக்கண்டி கந்தையா கனகம்மா நிதியத்தின் ஏற்பாட்டில் திருக்குறள் மனனஞ்செய் திறனாய்வுத் தேர்வில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர் சுப்பிரமணியம் சிவராசா தலைமையில் தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நாவற்குழி பிரதேசத்தில் அமைந்துள்ள 5 பாடசாலைகளினதும் பழைய மாணவர் சங்க செயலாளர்கள் விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (8)



முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுவலுவுள்ளோர் பாடசாலை ஒன்றின் தேவை தொடர்பாக மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதற்கு அமைவாக மாவட்ட செயலாளரினால் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று முள்ளிவாய்க்காலில் அரசினால் வழங்கப்பட்ட 2 ஏக்கர் காணியில் அமையவுள்ள மாற்று வலுவுள்ளோர் பாடசாலை கட்டட கட்டுமான ஆரம்ப வேலைக்கான நாள் கல்லு வைத்தல் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# மரண அறிவித்தல்



**அமரர். திருமதி. நகுலேந்திரன் நேசம்மா**

விராங்கொடை தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். நகுலேந்திரன் நேசம்மா 21.08.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தங்கம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற நகுலேந்திரன் அவர்களின் மனைவியும், ஜெயவதனி (சுவிஸ்), ஜெயவனிதா(லண்டன்) ஜெயரூபன் காலஞ்சென்ற ஜெயசுதாஸ் மற்றும் சஜீதரன் (கனடா), சௌமியா, ஆகியோரின் அன்புத் தாயும், செல்வநந்தன், கருணை சிவம், குயிலினி மற்றும் வினோயன் ஆகியோரின் அன்பு மாமியும் ஜனுசன், சாம்பவி, சஞ்சய், தர்னிகா, கயானன், ஆதித்தியன், அக்சயன், மதுமிதா, மனிசா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.08.2025 இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்று தகனக்கிரியை களுக்காக 2 மணியளவில் தெல்லிப்பளை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-குடும்பத்தினர்

விராங்கொடை, தெல்லிப்பளை. (1474)

077 529 6139, 077 695 6381, 0041765759125,00447825559018

# இராசிபலன்

22.08.2025
ஆவணி 06 , வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 12.50 மணி வரை

ஆயிலியம் பின்னிரவு 1.53 மணிவரை
சுபநேரம் 6.05 - 7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்
பூராடம்.

**வளவன்**

**மேஷம்**: வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்**: விருப்பங்கள் நிறைவேற விரதம் வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**துலாம்**: செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சொன்ன சொல்லை செயலாக்கி காட்டும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்**: வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**: சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறைகாட்டுவர், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்**: வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**கும்பம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மிதுனம்**: கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள்.

**தனுசு**: எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தாழ்ந்த சுபாவ முண்டு.

**மற்றவர் கருத்துக்களை தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 849





மழைக்காக மண்டபத்தில் வந்து ஒதுங்கியிருக்கிறோம்! என்று சொன்னாள் பூங்குழலி.

"சரி சரி! பல்லக்கின் அருகில் வரவேண்டாம்" என்றது அதே குரல்.

நாங்கள் ஏன் பல்லக்கின் அருகில் நெருங்கப் போகிறோம்? பல்லக்கில் ஏறுவதற்குப் பாக்கியம் செய்திருக்க வேண்டாமா! என்றாள் பூங்குழலி.

சேந்தன் அமுதன், வள்ளுவர் பெருமாள் கூட இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். முற்பிறப்பில் செய்த வினைப் பயனைப் பற்றிக் கூறும்போது என்று தொடங்கினான்.

"போதும், போதும்! வாயை மூடிக் கொண்டு சும்மா இருங்கள்! நீங்கள் எத்தனை பேர்?"

"நாங்கள் இரண்டு பேர் தான். இன்னும் இரண்டு நூறு பேர் வந்தாலும் இந்த மண்டபத்தில் மழைக்கு ஒதுங்கலாம்!" என்றான் அமுதன்.

தான் உண்மையென்று நம்பியதையே அமுதன் சொன்னான். அதே மண்டபத்தின் உட்புறத்தில் தூணின் மறைவில் மூன்றாவது மனிதன் ஒருவன் நின்றது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

பல்லக்குச் சுமந்தவன், "நான் அப்போதே சொன்னேன். மழை வந்ததும் மண்டபத்தில் போய் ஒதுங்கலாம் என்றேன் கேட்கவில்லை. அதனால் இந்தச் சங்கடம் நேர்ந்தது!" என்று தன் தோழனிடம் சொன்னான்.

"இப்படி ஆகும் என்று யார் அப்பா கண்டது? மழை வலுப்பதற்குள் கோட்டைக்குள் போய்விடலாம் என்று எண்ணினோம். இந்த மட்டும் பல்லக்கின் மேல் மரம் விழாமல் போச்சே!" என்றான் அவன் தோழன்.

இச்சமயம் இன்னொரு பிரகாசமான மின்னல் மின்னியது. சேந்தன் அமுதன் பூங்குழலி இருவர்களுடைய கண்களும் கவனமும் பல்லக்கின் பேரிலேயே இருந்தது. ஆகையால் அந்த மின்னல் வெளிச்சத்தில் பல்லக்கின் திரையை விலக்கிக் கொண்டு ஒரு பெண்மணி தாங்கள் நின்ற திசையை உற்று நோக்கிக் கொண்டிருந்ததை அவர்கள் பார்த்தார்கள்.

அப்படி நோக்கிய பெண்மணியின் முகம் அவர்களைப் பார்த்து இன்னார் என்று தெரிந்து கொண்டு புன்னகை புரிந்ததையும் கவனித்தார்கள்.

மறு விநாடி மண்டபத்திலும் வெளியிலும் இருள் சூழ்ந்தது. மிக மெல்லிய குரலில் பூங்குழலி, "அமுதா! பார்த்தாயா?" என்றாள். "ஆம், பார்தேன்"

"பல்லக்கில் இருந்தது யார்?" பழுவூர் இளைய ராணிதானே? உனக்கு என்ன தோன்றியது? "பழுவூர் ராணியைப் போலத் தான் இருந்தது ஆனால் கொஞ்சம் சந்தேகமாக இருந்தது.

சந்தேகமில்லை நிச்சயந்தான். எது நிச்சயம்? பழுவூர் ராணி அல்ல பித்துப்பிடித்த என் அத்தை ராணி தான் பல்லக்கில் இருக்கிறாள்! உஷ்! இரைந்து பேசாதே! இரைந்து பேசாவிட்டால் காரியம் நடப்பது எப்படி?

என்ன காரியம்? எதற்காக இத்தனை தூரம் வந்தோமோ, அந்தக் காரியந்தான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திட்டமிட்டு வேலை செய்தால்



(நேற்றைய தொடர்ச்சி)

துறவி சிறிது நேரம் கண்ணை மூடி அமர்ந்திருந்தார். மன்னா உன் நாட்டின் வறட்சியை என்னால் போக்க முடியும். குறுகிய கால திட்டம், நீண்ட கால திட்டம் என்ற இரண்டு முறைகள் உள்ளன. குறுகிய கால வழி என்பது என்னால் மந்திரங்கள் சொல்லப்பட்டு மழை பொழிய ஆரம்பிக்கும். வறட்சி நீங்கும். ஆனால் மறுபடியும் வறட்சி வரும் அப்பொழுது என்னைப்போல வேறு ஒரு துறவியிடம் நீ செல்ல வேண்டியிருக்கும்.

ஆனால் உடனடிப் பலனுண்டு. நீண்ட கால வழி என்பது மந்திர தந்திரமல்ல நான் சொல்லும் யோசனைகளை மட்டும் செய்தால் போதும். அது பலன் தர நாட்களாகலாம். அதன் பின் வறட்சி வந் தாலும் உன்னால் சமாளித்துக் கொள்ளலாம். என்ன சொல்கிறாய் என்று கேட்டார்.

சிறிது நேரம் யோசித்து நின்ற மகதவர்மன், ஐயா எனது நாட்டுக்கு நீண்ட கால திட்டம் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன். ஏனெனில் எதிர்காலத்தில் இது போல் துன்பம் வந்தால் எனக்கு பிறகு வரும் மன்னனுக்கு மிகுந்த துன்பத்தை தரும். உன்னுடைய நல்ல எண்ணத்தை பாராட்டுகிறேன் உன்னால் இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த வறட்சியை சமாளிக்க முடியும். முனிவரே இன்னும் ஐந்து, ஆறு மாதங்கள் மட்டுமே இருப்பை வைத்து சமாளிக்க முடியும். கவலைப்படாதே. உன் நல்ல மனதுக்கு அவ்வளவு காலம் துன்பப்படமாட்டாய். அடுத்த மாதத் திலிருந்து நல்ல மழை பெய்ய வாய்ப்பிருக்கிறது. அதற்குள் உன் மக்களை தயார்படுத்து வதுதான் இப்பொழுது முக்கியமான பணி. என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்.

உன் நாட்டில் ஆற்று வெள்ளம் வரும் பாதை இருக்கிறதா? ஆம் அது காய்ந்து வறண்டு போய் கிடக்கிறது. கவலைப்படாதே, முதலில் ஒரு கூட்டத்தை ஆற்றுப்பாதையை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும், அதன் கரையோரங்களில் மரக்கன்றுகளை நட்டு வைக்கச் சொல். அடுத்து ஒரு கூட்டத்தை ஆற்றிலிருந்து நான்கைந்து இடங்களில் கால்வாய் வெட்டி ஊருக்கு நடுவே குளம் எடுக்க செய், அதனை சுற்றி கரையை உயரப்படுத்தி பலப்படுத்த செய். மூன்றாவது ஒரு கூட்டத்தை நாடு முழுவதும் மரக்கன்றுகளை நட்டு தண்ணீர் விட்டு பாதுகாத்து வைக்க சொல். அடுத்ததாக ஒவ்வொரு வீட்டிலிருந்து வெளியேறும் தண்ணீரை ஒரு குழியில் விடச் சொல். ஒவ்வொரு விவசாயியும் தம் விளை நிலத்தில் ஒரு குளம் போல் வெட்டி தண்ணீரை சேமித்து வைக்கச் சொல்.

இறுதியாக ஆற்றில் வெள்ளம் வருமுன் நான்கைந்து இடங்களில் தடுப்பணை போல கட்டி பெரும் வெள்ளம் வந்தாலும் வெளியேறி செல்லவும் வெள்ளம் வராத காலங்களில் தடுப்பணையில் தண்ணீர் தேங்கி நிற்கவும் ஏற்பாடுகள் செய்து விடு. இதன் பலனை ஒரு வருடத்தில் காண்பாய்.

மகதவர்மன் துறவியை வணங்கி விடை பெற்றான். துறவி சொன்ன வேலைகளை அவசர அறிவிப்பாக அறிவித்து நாட்டில் உள்ள அனைத்து படை வீரர்களுடன், குடிமக்களையும் இந்த செயலில் ஈடுபட வைத்தான். விவசாயிகளும் வறட்சி காலமாக இருந்ததால் இந்த காரியங்களில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். அடுத்த ஒன்றரை மாதங்களுக்குள்ளாகவே நல்ல மழையை பார்த்த அந்த நாடு அதன் பின் பெருமளவு வெள்ளம் வந்தாலும் வடிகால் வழியாக வெளியேற்றி, எந்தளவுக்கு வறட்சி வந்தாலும் ஈரப்பதம் காயாமலும் நாட்டை பாதுகாத்து வளப்படுத்திக்கொண்டன. (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் சிந்திக்கும் விதம் உங்கள் வாழ்க்கையை மாற்றும்.
– அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கூறிய அந்தச் சூத்திரதாரி யார்?

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி யார் என்பதை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கத்துக்கு நன்கு தெரியும்.

ஆனால் அந்த சூத்திரதாரியை அநுர அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிய மேற்படி விடயத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டிய தேவை உண்டு.

இதற்கு மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர் என்பது காரணம் அல்ல.

மாறாக, இந்த நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரி இருந்த காலத்திலேயே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

தவிர, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பிலான நீதிமன்ற விசாரணைகளின் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நூறு மில்லியன் ரூபாயை நிவாரணமாகச் செலுத்த வேண்டும் என்ற தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியிருந்தது.

இங்குதான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிய கருத்து முதன்மை பெறுகின்றது.

அதாவது ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் மூளையாக – சூத்திரதாரியாகச் செயற்பட்டவர் யார் என்பது ஜனாதிபதி அநுரவுக்கும் அவரது அரசாங்கத்துக்கும் நன்கு தெரியும்.

அதைவிட இராணுவத் தரப்புகள், புலனாய்வுப் பிரிவினர் என சகல தரப்புகளுக்கும் அது தெரிந்ததே.

இருந்தும் அந்த சூத்திரதாரியை இவர்களால் எதுவும் செய்ய முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கூறியிருப்பது பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆம், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்பதை வெளிப்படுத்துவோம் என அநுர அரசாங்கம் கூறியிருந்தது.

அதிலும் கடந்த ஈஸ்டர் தினத்துக்கு முன்பாக அந்தத் தகவல் பகிரங்கப்படுத்தப்படும் என்ற உத்தரவாதத்தையும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பொதுக்கூட்டமொன்றில் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

எனினும் அவர் அதனைச் செய்யவில்லை. இங்குதான் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ள விடயம் முதன்மைக்குரியதாகிறது.

ஆம், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி யார் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிந்திருந்தும் அதனைப் பொதுமக்களிடம் கூற முடியாத நிலையில் அநுரவின் அரசாங்கமும் படைத்தரப்பும் உள்ளது எனும்போதுதான், இது யாராக இருக்கும் என்ற தேடல் பொதுமக்களை நோக்கி எழுகை பெறுகிறது.

எதுஎவ்வாறாயினும், குற்றவாளிகளை மறைப்புச் செய்வது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல என்பதே நம் கருத்தாகும்.

### மாகாண சபைத் தேர்தலை நடத்தி

## அரசியலமைப்பிலுள்ள அதிகாரங்களை வடக்கு – கிழக்கு மக்களுக்கு வழங்குங்கள்

### நளின் பண்டார எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

எனவே மாகாண சபைத் தேர்தலை நடத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு அரசியலமைப்பு ரீதியிலான நிர்வாக அதிகாரங்களை வழங்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (21) நடைபெற்ற நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும் நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

ஏனைய வாக்குறுதிகளைப்போன்றுமாகாண சபைத் தேர்தல் வாக்குறுதியையும் அரசாங்கம் பொய்யாக்கக் கூடாது.

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி வாக்குறுதியளித்தார்.

எதிர்வரும் மாதத்துடன் ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய சாதகமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை என்றார். (ம-7)

## சி.ஐ.டியில் இன்று ஆஜராகுகிறார் முன்னாள் ஜனாதிபதி ரணில்

அரசாங்கப் பணத்தில் தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டமை குறித்த விசாரணைக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (22) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகவுள்ளார்.

ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அரசு முறைப்பயணமாக அமெரிக்கா சென்றிருந்த நிலையில் அங்கிருந்து பிரித்தானியாவிற்கு விஜயம் செய்திருந்தார்.

குறித்த பிரிட்டன் விஜயமானது தனிப்பட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் அது அரசு நிதியிலிருந்து நிதியளிக்கப்பட்டதாகவும் அவருக்கெதிராகக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

10பேர் கொண்ட குழுவை உள்ளடக்கிய இந்தப் பயணத்திற்கு, அரசாங்கத்திற்கு சுமார் ரூ.16.9 மில்லியன் இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக சி.ஐ.டி மதிப்பிட்டுள்ளது.

இது குறித்த விசாரணையின் ஓர் அங்கமாக முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏகநாயக்க மற்றும் ரணிலின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரிடம் குற்றப்புலனாய்வுத் துறையினரால் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது.

இவ்வாறான பின்னணியிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாக்குமூலத்தைச் சமர்ப்பிப்பதற்காகக் குற்றப்புலனாய்வுத் துறையில் முன்னிலையாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கொழும்பில் நேற்று தாழிறங்கிய வீதி

(கொழும்பு)

பொரளை பொலிஸ் பிரிவின் மொடல் ஃபார்ம் சந்திக்கு அருகிலிருந்து டி.எஸ். சேனநாயக்க சந்தி வரையான கொழும்பு வீதியில் நேற்றுத் தாழிறக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டதாகவும் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## கொலைக் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிப்பு

### கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

வாக்குவாதம் காரணமாக கூரிய ஆயுதத்தால் ஒருவரை குத்திக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 43 வயது சந்தேக நபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (21) மரண தண்டனை விதித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேஷ் வீரமன் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

2010 மார்ச் 2, அன்று களனியில் ஒருவரைக் கொலை செய்ததாகக் குறித்த நபர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்த நிலையில் நீண்ட விசாரணைக்குப் பின்னர் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதன் பின்னணியில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## தேசபந்து தென்னகோனுக்கு 27ம் திகதி வரை மறியல்

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் முன்வைத்த வாதங்களைப் பரிசீலித்த பின்னர் கொழும்புக் கோட்டை நீதவான் திருமதி நிலுபுலி லங்காபுர இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ம-7)

## வலிகாமம் மேற்கில் பண்பாட்டு விழா

(அராலி)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்தும் "பண்பாட்டு விழா - 2025" கலை கலாச்சார நிகழ்வானது இன்று வெள்ளிக்கிழமை (22) மாலை 02.00 மணியளவில் அராலி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புநடனம், சண்முக கௌத்துவம், கிராமிய நடனம், அஷ்டலக்சுமி நாட்டிய நாடகம், மாங்கனி சிந்து நடைக்கூத்து உள்ளிட்ட பிரதேசத்தின் கலைகலாசாரத்தை பிரதிபலிக்கும் பலவேறு நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. (ம-7)

## அருண ஜயசேகரவுக்கு எதிரான பிரேரணை சட்டமா அதிபரிடம்

(கொழும்பு)

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக சட்டமா அதிபரிடம் பாராளுமன்றச் செயலகம் ஆலோசனை கோரியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருவதால், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை அந்த வழக்கை பாதிக்குமா? இல்லையா? என்பது குறித்தே சட்டமா அதிபரிடம் பாராளுமன்றச் செயலகம் ஆலோசனை கோரியுள்ளதாக சபாநாயகர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 43

சொக்கன்

## சன்டேன்னா குண்டு!

மெஷாத் குடும்பம் விடுமுறைக்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

டிக்கெட் ரெடி பயணப் பைகள், சூட்கேஸ்களைக் கட்டி முடித்துத் தயார் செய்தாகி விட்டது. இன்னும் கொஞ்ச நேரத்தில் புறப்படவேண்டியதுதான்.

திடீரென்று மெஷாத் வீட்டுத் தொலைபேசி அலறத் தொடங்கியது. வெளிநாட்டு அழைப்பு.

ஹலோ சார் நாங்க சார்செலஸ் தொழிற்சாலையிலே இருந்து பேசுகிறோம். யாரோ பதற்றத்துடன் சொன்னார்கள். இங்கே ஒரு பெரிய பிரச்சினை நீங்க உடனடியாப் புறப்பட்டு வரணும்.

யாஹியா அல்மெஷாத் லேசாக முகம் சுளித்தார். நான் இப்ப லீவ்ல இருக்கிறேனே. என்றார் எனக்குப் பதிலாக வேறு யாரையாவது அனுப்பிவைக்கட்டுமா?

மன்னிக்கணும் சார் இந்தப் பிரச்சினையை நீங்கள் மட்டும்தான் தீர்த்துவைக்க முடியும்.

வேறவழி இல்லாமல் தான் உங்களைத் தொந்தரவு செய்கின்றோம் நீங்கள் தயவு செய்து உங்கள் லீவைக் கொஞ்சம் தள்ளிப்போட வேண்டும்.

மெஷாத்திற்கு எரிச்சல் ஆனால் என்ன செய்ய முடியும்? கடமை அழைக்கிறது குடும்ப விடுமுறையைத் தற்காலிகமாக ஒத்தி வைத்து விட்டு ஃபிரான்ஸ் கிளம்ப வேண்டியது தான்.

யாஹியா அல்மெஷாத் எகிப்தில் பிறந்தவர். சதாம் உசேனின் அணு ஆயுதக் கனவை நிஜமாக்கிக்கொண்டிருந்த அரேபிய விஞ்ஞானிகளில் முக்கியமானவர். அவர் ஈராக்பக்கம் இருக்கும்வரை அவர்களுடைய அணுகுண்டுத் தயாரிப்பை யாராலும் தடுக்கமுடியாது!

அதனால்தான் மொஸாட் மெஷாத்துக்குக் குறிவைத்திருந்து. எப்படியாவது அவரை விலைக்கு வாங்கித் தங்கள்பக்கத்துக்குக்கொண்டு வந்துவிட வேண்டும் என்று துடித்தார்கள்.

ஆனால் மெஷாத் அத்தனை சுலபத்தில் பணிகிற மனிதர் இல்லை. தன்னிடம் பேசுகிறவர்கள் பழகுகிறவர்கள் மீது ஒரு சின்னச் சந்தேகம் ஏற்பட்டாலும் சட்டென்று விலகிப் போய்விடுவார். அவரை நெருங்கிச் சென்று வளைப்பது மிகவும் சிரமம்.

ஏற்கெனவே பல தடவை மெஷாத்தை மடக்கிப்போடுவதற்கு மொசாட் முயற்சி செய்திருக்கிறது. ஆனால் ஒவ்வொருமுறையும் அவர்கள் மூக்கு உடைந்தது தான் மிச்சம்.

சதாம் உசேனுக்காகத் தன்னுடைய உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்து விட்டவராகத் தோன்றி னார் மெஷாத்.

கடைசியாக மொசாட் மேலிடம் ஒரு முடிவுக்கு வந்தது. இன்னும் ஒரே ஒரு தடவை முயற்சி செய் யலாம். அதுவும் சரிப்படவில்லை என்றால் வேறு வழியே இல்லை



மெஷாத்தைத் தீர்த்து விட வேண்டியது தான்.

1980 ஜூன் மாதத் தொடக்கத்தில் மெஷாத் ஃபிரான்ஸ் வந்தார். அங்குள்ள சார்செலஸ் தொழிற்சாலையில் ஈராக்கின் அணு உலை தனது இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சத் தூரம்தான். விடாமல் தம்பிடித்து முன்னேறினால் ஜெயித்துவிடலாம் என்கிற நிலைமை. விஞ்ஞானிகள், தொழிலாளர்கள் மற்ற ஊழியர்கள் எல்லோரும் இரவு, பகல் பார்க்காமல் உழைத்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படிச் சாப்பிடாமல் தூங்காமல் வேலை பார்க்கிறபோது இடையிடையே கொஞ்சமாவது ரிலாக்ஸேஷன் வேண்டாமா? தனக்குத் தெரிந்த பாலியல் தொழிலாளி ஒருவரை அழைத்தார் மெஷாத் இன்றைக்கு நைட் 7.30க்கு என் ரூம்க்கு வர்றியா? ஓகே

ஆனந்தக் கற்பனைகளோடு படுக்கையில் சாய்ந்தார் மெஷாத். ஏழரை மணிக்கு இன்னும் கொஞ்ச நேரம் தான் இருக்கிறது.

திடீரென்று அழைப்பு மணி ஒலித்தது. அதுக்குள்ள வந்துட்டாளா? இருக்காதே!

கவனமாகக் கதவைத் திறந்து பார்த்தார் மெஷாத் அங்கே ஒரு புதியவன் நின்றிருந்தான் யாருப்பா நீ? என்ன வேணும்?

உங்களிடம் கொஞ்சம் பேசவேண்டும் என்றான் அவன். எங்களுக்குச் சில தகவல்கள் தேவைப்படுகிறது. பணத்தைப்பற்றிக் கவலை இல்லை என்ன சொல்றீங்க?

மெஷாத்துக்கு ஒன்றும்புரியவில்லை. ஆனால் இந்த ஆள் ஏதோ தப்பான நோக்கத்துடன் வந்திருக்கிறான் என்பது மட்டும் விளங்கியது. கெட் அவுட் என்று கதவை அறைந்து சாத்தி விட்டார்.

வெளியே நின்றிருந்த மொசாட் ஏஜென்ட் நம்பமுடியாமல் தலையை உலுக்கிக் கொண்டான். பாவம் மெஷாத் அவர் உயிர் பிழைப்பதற்கான கடைசி வாய்ப்பையும் வீணடித்துவிட்டார்!

அந்த ஆள் வெளியேறிச் சில நிமிடங்களுக்குப்பிறகு மெஷாத் ஏற்பாடு செய்திருந்த பாலியல் தொழிலாளி வந்தாள். அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள்.

மொசாட் அதிரடிப் படை வீரர்கள் தங்களுக்குள் சிரித்துக் கொண்டார்கள். மெஷாத் எப்படியும் சாகப்போகிறான். கொஞ்சம் அனுபவித்துவிட்டுப் போய்ச் சேரட்டுமே!

கொஞ்ச நேரம் கழித்து அந்தப் பெண் வெளியேறினாள். கதவு பூட்டப்பட்டது. அறைக்குள் விளக்கு அணைந்து இருள் சூழ்ந்தது.

மொசாட் வீரர்கள் சிறிது நேரம் காத்திருந்தார்கள். பின்னர் பூட்டை உடைத்துக் கொண்டு மெஷாதின் அறைக்குள் நுழைந்தார்கள். அசந்து தூங்கிக் கொண்டிருந்த விஞ்ஞானியின் கழுத்திலும் நெஞ்சிலும் கத்திகளைப் பாய்ச்சினார்கள்.

மறுநாள் மெஷாத் கொலை செய்யப்பட்ட செய்தி வெளியானதும் அந்தப் பாலியல் தொழிலாளி ஆடிப்போய்விட்டாள். கடைசியாக அவரை உயிரோட பார்த்தது நான்தானே? ஒருவேளை பொலிஸ் என்மேல் சந்தேகப்பட்டு விட்டார்கள் என்றால்?

அவள் நேரடியாகக் காவல்துறையிடம் போனாள் தனக்குத் தெரிந்த விபரங்களைச் சொல்லிப் பதிவு செய்துகொண்டாள்.

சிலநாள் கழித்து அந்தப் பெண்ணும் ஒரு சாலை விபத்தில் கொல்லப்பட்டாள். அது நிஜமாகவே விபத்தா அல்லது மொசாட்டின் கைங்கர்யமா என்பது யாருக்கும் தெரியவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேரேறி...

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த் திருவிழா இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்று மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

காலை 6.15 மணியளவில் ஆரம்பமான விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

தேர்த்திருவிழாவைக் காண நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதேவேளை ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப்பிரதட்சணம் செய்யும் நூற்றுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூரச்சட்டிகள் ஏந்தியும் முருகப்பெருமானை வழிபட்டனர்.

இன்று காலை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளதுடன், மாலை கொடியிறக்கம் நடைபெறும். (ம-7)

## வடமராட்சியில்...

பகுதியில் கைக்குண்டு ஒன்று இருப்பதை அவதானித்த கடற்படையினரால் உடனடியாகப் பாதுகாப்பான முறையில் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கைக்குண்டினை கடற்படையினர் மருதங்கேணிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன் இது சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## கசிப்புடன்...

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 110 லீற்றர் கசிப்பும் 524 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் இன்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7,316)

## இலங்கையிட...

எனத் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு மதுரையில் நேற்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் விஜய் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் பாரதப் பிரதமர் மோடி கச்சதீவை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் தாக்கப்பட்டு வருவதாகவும் விஜய் தமது உரையில் சுட்டிக்காட்டினார். (ம-7)

## செம்மணிப் புதை...

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ என்னும் முன்னாள் இராணுவ லான்ஸ் கோப்ரல், இராணுவத்தின் படுகொலைச் செயற்பாடுகள் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றுக்கு சாட்சியமளித்த பி2899 என்னும் வழக்கினைத் தற்போதைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்குடன் தொடர்புபடுத்துவதுடன், பன்னாட்டு நீதி விசாரணைகளில் சோமரத்ன ராஜபக்ஷ இணைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

அத்தோடு செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பது தொடர்பான விசாரணைகளில் வாக்குமூலம் வழங்கவரும் மக்களை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அச்சுறுத்துவதை இதன்போது சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் இத்தகைய செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்தார்.

மேலும் செம்மணி கோரப் படுகொலையின் விசாரணைகள் மும்முரமடையும்போது குற்றமிழைத்த படையினர் நாட்டை விட்டுத் தப்பியோட வாய்ப்பிருப்பதாகச் சுட்டிக்காட்டிய ரவிகரன், இவ்விடயத்தில் குற்றமிழைத்த தரப்பினர் நாட்டைவிட்டுத் தப்பிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## வன்முறைக்...

நல்லூர் ஆலயத்திற்கு 500 மீற்றர் தூரத்தில் உள்ள வீடொன்றில் வசிக்கும் குடும்பத்தினர் நேற்றுக் காலை நல்லூர்த் தேர்த்திருவிழாவிற்குச் சென்ற சமயம், வீட்டில் யாருமில்லாத நேரம் வீட்டினுள் அத்துமீறி நுழைந்த கும்பல் வீட்டின் வரவேற்பறையில் காணப்பட்ட தளபாடங்களுக்கு தீ வைத்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

நல்லூர்க் கோயிலுக்குச் சென்றவர்கள் வீட்டில் இருந்து பெரும் புகை வருவதனை அவதானித்து அயலவர்களுக்குத் தெரியப்படுத்தி, அயலவர்களுடன் இணைந்து தீயினை அணைத்துள்ளனர்.

சம்பவத்தை அறிந்து ஆலயத் திற்குச் சென்ற வீட்டாரும் வீடு திரும்பினர். சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7,33)

## கட...

உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைக்கென யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் ஒன்று அமைக்கப்படும் என உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழ்...

அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“எமது அமைச்சின் கீழ் பல வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்.மாவட்டத்துக்கென ஒரு துறைமுகமொன்று இருக்கவில்லை. எனவே மயிலிட்டி துறைமுகத்தை நவீன துறைமுகமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் அதற்குரிய வேலைத்திட்டம் ஆரம்பமாகும்.

அத்துடன் 165 மில்லியன் ரூபாய் செலவில் யாழ்.கொழும்புத்துறையிலுள்ள துறைமுகத்தையும் நவீன துறைமுகமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மன்னார், பேசாலையில் இறங்குத்துறையை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பேசாலையில் வாழும் மக்களுடன் பேச்சு நடத்தி அவர்களின் குறைபாடுகளைத் தீர்த்து, பேசாலையிலும் துறைமுகமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் யாழ். குருநகர்ப் பகுதியில் இறங்குத் துறைமுகமொன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்குரிய ஆரம்பகட்ட நடவடிக்கை இடம்பெறுகின்றது. இப்பணி முடிந்த பின்னர் நிதி ஒதுக்கப்படும் என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.08.21 — சீட்டிழுப்பு இலக்கம் 5928 — P 0 7 7 7 9 5
அத சம்பத — P 7 7 9 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0503 — National Lotteries Board

சுப தவசக் — திகதி 2025.08.21 — 0044 — தனுசு 10 26 27 29

தன நிதானய — திகதி - 2025.08.21 — சீட்டிழுப்பு இலக்கம் - 1958 — Z 10 65 69 71 Z — Double Chance 07956

மெகா பவர் — திகதி 21/08/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2276 — I 25 45 48 65 71

ஜய — திகதி 2025.08.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0196 — A 6 0 2 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4170 — சீட்டிழுப்பு திகதி 21.08.2025 — B 07 28 33 74 — B

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.08.21 — சீட்டிழுப்பு இலக்கம் 1237 — விருச்சிகம் 16 25 28 58 விருச்சிகம் — 77157

உத்தியோகபூர்வ முடிவுகள் — 21.08.2025 — வெற்றி வாரம் 0636 — W 6 2 7 2 7 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,490,528.40 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2902 — சீட்டிழுப்பு திகதி 2025.08.21 — தினம் வியாழக்கிழமை — 15 68 72 80 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,650,419.20

சனிதா — திகதி 21.08.2025 — வெற்றி வாரம் 5063 — 09 27 42 71 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,242,337.20

சசிரி — வெற்றி வாரம் 0752 — சீட்டிழுப்பு திகதி 21.08.2025 — வியாழக்கிழமை — 10 41 50 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4614 — சீட்டிழுப்பு திகதி 21.08.2025 — தினம் வியாழக்கிழமை — 24 25 51 58 தனுசு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,938,018.80

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — N 34 30 36 48 54 — 2078 — 21.08.2025 வியாழக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.589,198,674.60

அத கோட்டிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2728 — சீட்டிழுப்பு திகதி 2025.08.21 — 28 30 41 61 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.84,360,648.00


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாப்பிள்ளை தேவை

01. சுதுமலை, இந்து, 1982, உத்திரட்டாதி, Certified Public Accounting (USA) ,Charted Accountant, USA Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 38499
02. புங்குடுதீவு - சாவகச்சேரி, இந்து, 1990, மகம், Advanced Dip.Account,Accountant,Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 38484
03. மீசாலை - புலோலி, இந்து, 1991, அவிட்டம், Bsc Hons Soft ware Engineering, Singapore Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34791
04. சங்கானை - கே.கே.எஸ். இந்து. 1998. அத்தம். Bsc Accounting With Economics, Germany + UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34476
05. இளவாலை - காரைநகர். இந்து. 1990, அவிட்டம், Master Of Science In Business and Economics,Switzerland Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34366
06. காரைநகர். இந்து, 1999, அத்தம், Business and Finace, Graduate,Uk Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34362
07. கரவெட்டி. இந்து. 1995. அவிட்டம். LLB University Of (Australia),Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34194
08. யாழ்., இந்து, 1994, அனுஷம், BSc Engineering, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34178
09. காரைநகர், இந்து, 1992, சித்திரை, Msc in Strategic Marketing (UK), Phd,Canada Citizen அழகான பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 54115
10. தெல்லிப்பழை - நல்லூர், இந்து, 1994, பூரட்டாதி, MBBS, MD, Doctor, USA Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 36611

நீங்களே www.thaalee.comஇல் பார்த்து உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். (5108)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com

## உடனடி விற்பனைக்கு

வீட்டிலிருந்து கழற்றிய 2500 பழைய தரமான ஓடுகள் விற்பனைக்கு உண்டு. (1471)

070 219 9296
074 294 5542

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3718)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Resturant ற்கு உணவு பரிமாறுபவர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் வரவேற்பாளர்கள்தேவை. (5093)

076 830 3931

## பணியாளர்கள் தேவை

காட்வெயார் கடையில் விற்பனையில் அனுபவமுள்ள, பழக விரும்பும் பணியாளர்கள் தேவை.

தங்களது வதிவிடச் சான்றிதழ் மற்றும் தகைமைச் சான்றிதழுடன் நேரில் சமூகம் தரவும். (C-3713)

குரு காட்வெயார்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி

## வேலையாள் தேவை

மிளகாய்தூள் உற்பத்திக்கும், பண்ணைக்கும் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் தேவை.

- வயது 35-50
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வெளிமாவட்டத்தினரும் விண்ணப்பிக்க முடியும்.
- இடம் - சுன்னாகம், யாழ்ப்பாணம்.

காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை (1473)

தொடர்பு: 070 557 7798

## தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் லொத்தர் சபை அலுவலகம் ஒன்றிற்கு கணனி மற்றும் கணக்குப் பதிவு அறிவுடைய பணியாளர் தேவை. (5102)

077 603 1723

## வெளிநாட்டில் (canada) இல்வசிக்கும் மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை

1981(Divorce), 1990, 1990(Divorce), 1993, 1995(02), 1997, 1999, ஆண்டுகளில் பிறந்த மணமகள்களுக்கு உடனடியாக உள்ளூர் மணமகன்கள் தேவை.

1991, 1992, 1998 ஆகிய கனடா மணமகள்களிற்கு திருமணம் இவ்வாறம் நிச்சயிக்கப்படவுள்ளது. (5107)

077 041 3462, 077 408 8241

## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

UK - 1320/= | Australia - 2220/=
France - 2080/= | Canada - 2570/=
Germany - 1920/= | மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி (3475)

## ஓட்டோ சாரதி தேவை

60 வயதிற்கு மேற்பட்ட ஓட்டோ சாரதி ஒருவர் தேவை. தெல்லிப்பழை, கீரிமலை, அளவெட்டி, மல்லாகம் ஆகிய இடங்களில் வசிப்போர் விரும்பத்தக்கது. (1476)

077 609 6581

## மரண அறிவித்தல்



### பொன்னம்பலம் நித்தியானந்தம்

பொன்னாவெளியைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி, ஆனந்தபுரம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் நித்தியானந்தம் (முன்னைநாள் உதவி அரசாங்க அதிபர் கரைச்சி மற்றும் விசேட ஆணையாளர் கரைச்சிப் பிரதேச சபை) அவர்கள் கடந்த (20.08.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் - அமிர்தவல்லி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் சுப்பிரமணியம் - கனகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் சின்னப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் ஞானாம்பிகை, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காயத்திரி (அதிபர் - வவுனியா கங்கன்குளம் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்), லாவண்யா (நியூசிலாந்து), கோபிநாத் (மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமுதவாசன், இராகுலன், சிவரமணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அபிசன், அக்ஷனா, துசாரா, அகரன், அகர்ஷா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22.08.2025 வெள்ளிக்கிழமை இல.19, ஆனந்தபுரம், கிளிநொச்சியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்
குடும்பத்தினர்

(C - 3719)

## 22 விற்பனைக்கு 22


01. யாழ். கே.கே.எஸ் வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 06, 03, 08 பரப்புக் காணியும்
02. யாழ். கே.கே.எஸ் வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 10 பரப்பில் அமைந்த அதி நவீன கட்டிடமும் காணியும்
03. யாழ். விக்டோரியா வீதியில் விக்டோரியா வீதி முகப்புடன் 16, 14 .12 பரப்புக் காணியும்
04. யாழ்.நல்லூர் கோவிலுக்கு அண்மையில் குரொஸ் வீதியில் 10 பரப்புக் காணியும்
05. யாழ்.கீரிப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 2½ பரப்பில் அமைந்த காணியும் வீடும்
06. யாழ்.நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

(C-3720)

077 723 2535

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் அபிவிருத்தி உத்தியோகத்தர்



தோற்றம் 24 - 01 - 1982

மறைவு 20 - 08 - 2025

### அமரர் பாலசுப்பிரமணியம் பிரதீபன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த அனுதாபங்கள்:-
கல்லூரி நலன்புரிக் கழகம்
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்

(C-3717)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... அவர்களது அச்சகத்தில் 22.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org